மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 400. திரு. எம். ஆண்டி அம்பலம். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

400—

## புதிய தாலுகாக்கள் அமைத்தல்.

*5550— திரு. எம். ஆண்டி அம்பலம் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) எந்தெந்த தாலுகாக்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் புதிதாக அமைக்கப்பட்டன?

(ஆ) மேலும் எந்தெந்த தாலுக்காக்களைப் பிரித்து புதிய தாலுக்காக்கள் உருவாக்க அரசு உத்தேசித்துள்ளது ?

(இ) எப்போது புதிய தாலுகாக்கள் அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ), (ஆ) மற்றும் (இ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள பல்லடம் வட்டம் பிரிக்கப்பட்டுள்ளது. அதேபோல், சேலம் மாவட்டத்தில் நாமக்கல்லிலிருந்து பரமத்தி வேலூர் பிரிக்கப்பட்டு இருக்கிறது. பொதுமக்களினுடைய கோரிக்கைகளை அவ்வப்போது ஆராய்ந்து, அவைகள் நடைமுறைப் படுத்தப்படும்.

திரு. எம். ஆண்டி அம்பலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் அவர்கள் 2 மாவட்டங்களை மட்டும் சொல்லி முடித்துவிட்டார்கள். அதற்காக ரொம்ப நன்றி. இப்போது தாலுகாக்கள் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தாலுகாவிலும் நீதிமன்றம், அரசு மருத்துவமனை, 'ட்ரெசரி' போன்றவைகள் அனைத்தும் பொதுமக்கள் நலன் கருதி அரசே உடனே செய்துதருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய 'வட்டம்' ஆகப் பிரிக்கப்படும்போது, அங்கே ட்ரெசரி நிச்சயமாக வந்துவிடுகிறது. சில நேரங்களில் காலதாமதம் ஆகிறது. அதேபோலத்தான் மருத்துவமனைகள். அதற்குத் தனி அமைச்சர், தனி இலாகா இருந்தாலும் வட்டம் பிரிக்கப்படுகிற இடங்களில் எல்லாம், பெரும்பாலும் எல்லா

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

இடங்களிலும் மருத்துவமனைகள் இருக்கின்றன என்று தான் நான் கருதுகிறேன். அது தேவைப்பட்டால் அவ்வப் போது வரும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆண்டி அம்பலம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால், அந்த நீதிமன்றம், அரசு மருத்துவ மனை, ட்ரெசரி போன்றவைகளில் பணியில் உள்ளவர்களுக்கு குடியிருப்பதற்கு வசதி இல்லாமல் அவர்கள் ரொம்பக் கஷ்டப்படுகிறார்கள். எனவே இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு வீடுகள் கட்டித் தருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு கேள்வி கேட்டு இருக்கிறார்கள். ஆனால், மொத்தமாகச் சொல்ல வேண்டும் என்றால், அரசு அதிகாரிகளுக்கு கூடிய வரையிலும் குடியிருப்புகள் கட்டிக் கொண்டு தான் இருக்கிறோம். பெரும்பாலான அரசு அலுவலர்களுக்கு, அதுவும் பொதுவாக வட்டாட்சியர்கள், கோட்டாட்சியர்கள் —அப்படிப்பட்டவர்களுக்கெல்லாம் வீடுகள் கட்டிக் கொடுக் கப்பட்டு இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. பால கங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகப் பிரிக்கப்படும் தாலுகாக் களுக்கு சாதாரண "ரிகுயர்மென்ட்ஸ்" என்னென்ன உள்ளனவோ அத்தகைய தேவைகள் எல்லாம் எங்கள் தொகுதியான சிவகாசி தொகுதியிலே உள்ளன. அங்கே ஏற்கனவே ட்ரெசரி உள்ளது, நீதிமன்றம் உள்ளது, மருத்துவமனை உள்ளது. இத்தனை வசதிகள் இருந்தும், அங்கே அதிக அளவில் ட்ரெசரிக்கு செல்பவர்களும் சிவ காசியிலே தான் உள்ளார்கள். இந்த நிலைமைகள் இருந்தும், ஒருசில காரணங்களுக்காக சாத்தூர் வட்டம் பெரிய வட்டமாக இருந்துகொண்டு சாத்தூருக்குத்தான் செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டுக்கொண்டு இருக் கிறது. எனவே, அது குறித்து, சிவகாசியை தனித் தாலுகாவாக மாற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்பு மிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசு ஆய்வு செய்யும்.

1992 மார்ச் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. இராமசுவாமி.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி தாலுகாவிலிருந்து சங்கராபுரத்தை தனித் தாலுகாவாகப் பிரிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுகாவை பிரிக்கும்போது தேவைக்கு ஏற்றவாறு மக்களுடைய நலனைப் கருத்திற்கொண்டு வேண்டிய அளவுக்கு பிரிக்கப் படும் என்பதைப் பொதுவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது இயங்கிக் கொண்டிருக்கிற இரண்டு தாலுகாக்கள்—உதாரணமாக தென்காசி, வி. கே. புதூர் ஆகிய இரண்டு தாலுகாக்கள் தனியாக இயங்கிக் கொண்டிருக்கிற இடத்தில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் அவரவர்கள் தொகுதியில் ஏதாவது புதிய தாலுகாக்களை ஆரம்பிக்க வேண்டுமென்று கோரிக்கை இருந்து கொண்டுதான் இருக்கும். பேரவைத் தலைவருக்கே அப்படி ஒரு கோரிக்கை உண்டு. (சிரிப்பு) எனவே, ஒவ்வொருவரும் கேட்டுக்கொண்டு இருந்தால் இந்தக் கேள்விக்கே நேரம் சரியாக இருக்கும்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: தலைவர் அவர்களே, இது பொதுவான கேள்வி. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஏற்கனவே இதுபற்றித் தெரியும். அதனால் இரண்டு தாலுகாக்களாக இருப்பதால் ஒர்க் பர்டன் அதிகமாக இருக்கிறது. பொதுமக்களுக்கு அது மிகவும் வசதிக் குறைவாக இருப்பதால் மூன்றாகப் பிரித்து—ஏற்கனவே கெசட் நோட்டிபிகேஷன் எல்லாம் கொடுக்கப் பட்டது—ஆலங்குளத்தைத் தனித் தாலுகாவாக இயக்குவதற்கு அரசு முன்வருமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆணையிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

[1992 மார்ச் 31

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவருடைய கோரிக்கை விரைவில் நிறைவேறுகிற இடத்தில் இருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது பற்றி அரசு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் தாலுகாக்களைப் பிரிக்கிறோம். சில குறிப்பிட்ட இடங்களில் தான் தாசில்தார்களுக்கும், ஆர்.டி.ஓ.-க்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படாமல் இருக்கின்றன. மற்ற இடங்களில் எல்லாம் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் தாலுகாக்களைப் பிரிக்கும்போது ஏற்கனவே இருக்கிற தாலுகாக்களில் உள்ள அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுவது—தலைவர் காமராசர் அவர்கள் காலத்தில் எப்படி பஞ்சாயத்து யூனியன்களைக் கொண்டு வந்தபோது அங்கெல்லாம் பஞ்சாயத்து யூனியன் ஆபீசர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுத்தார்களோ, அதைப்போல தாலுகாக்களில் பணியாற்றுகின்ற முக்கியமான அலுவலர்களுக்காவது ஒவ்வொரு தாலுகாவிலும் ஒரு திட்டம் போட்டு வீடுகள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கையெடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன்களை அமைக்கிறபோது பஞ்சாயத்து யூனியன்களில் அலுவலர்கள் எல்லோருக்கும் வீடு கட்டிக் கொடுத்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. உறுப்பினர் அவர்கள் காமராசர் அவர்கள் காலத்தில் கட்டியதாகச் சொன்னார்கள். எல்லோருக்கும் கட்டிக் கொடுத்ததாக எனக்கு அப்படித் தெரியவில்லை. ஆனால், இதைப் பொறுத்த வரையில் வட்டாட்சியர்களுக்கு மட்டும் இன்று கட்டிக் கொடுக்கப்படுகிறது. ரெவின்யூ இன்ஸ்பெக்டர்களுக்கு கட்டிக் கொடுக்கப்படுகிறது. மற்றவர்களுக்கு கட்டிக் கொடுப்பதற்கு இந்த அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 401.

**திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்,**